எண்: 100/2024 நாள்: 23/08/2024

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

எண் 3, தேர்வாணையச் சாலை, சென்னை - 600 003.

செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகளில் (நேர்முகத் தேர்வு) அடங்கிய பதவிகளுக்கான தேர்வு 12.08.2024 மு.ப., 19.08.2024 மு.ப & பி.ப, 20.08.2024 மு.ப., & பி.ப., 21.08.2024 மு.ப ஆகிய நாட்களில் கணினி வழித் தேர்வாக நடத்தப்பட்டது.

இதில் 12.08.2024 அன்று முற்பகல் நடந்து முடிந்த தாள் – I (தமிழ் தகுதித் தேர்வு மற்றும் பொது அறிவுத் தாள்) க்கான உத்தேச விடைகள் தேர்வாணைய இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த உத்தேச விடைகளின் மீது முறையீடு செய்ய விரும்பும் தேர்வர்கள் உத்தேச விடைகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் அதாவது 30.08.2024 க்குள் தேர்வாணைய இணைய தளத்தில் உள்ள “ Answer key Challenge” என்ற சாளரத்தைப் பயன்படுத்தி மட்டுமே முறையீடு செய்யலாம். இதற்கான அறிவுரைகள் வழிமுறைகள் தேர்வாணைய இணைய தளத்திலேயே வழங்கப்பட்டுள்ளன. அஞ்சல் வழியாகவும் மின்னஞ்சல் வழியாகவும் பெறப்படும் முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

19.08.2024 மு.ப & பி.ப, 20.08.2024 மு.ப., & பி.ப., 21.08.2024 மு.ப ஆகிய நாட்களில் நடைபெற்ற இதர பாடங்களுக்கு (தாள் – II) உத்தேச விடைக்குறிப்புகள் விரைவில், அதாவது அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு 15 நாட்களுக்குள், தேர்வாணைய இணைய தளத்தில் அவ்வப்போது வெளியிடப்படும் என தேர்வர்களுக்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

A. ஜான் லூயிஸ் இ.ஆ.ப

தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்